## மாதிரி வினாத்தாள்

## சட்டம் மற்றும் காவல் துறை சம்மந்தப்பட்ட பாடங்கள்

## (துறை சார்ந்த விண்ணப்பதாரர்கள் மட்டும்)

### இந்திய தண்டனைச் சட்டம்

01. இந்திய தண்டனைச் சட்டத்தில் (IPC) எத்தனை சட்டப்பிரிவுகள் உள்ளன?

a) 411 b) 323

c) 511 d) 501

02. கொள்ளை மற்றும் கூட்டுக் கொள்ளை இவை இரண்டிற்கும் உள்ள முதன்மையான வேறுபாடு என்ன?

a) குற்றவாளி ஆயுதங்களை பயன்படுத்தியது

b) குற்றத்தில் ஈடுபடும் குற்றவாளிகளின் எண்ணிக்கையை பொறுத்தது

c) குற்றவாளி ஏற்படுத்தும் காயத்தின் தன்மையை பொறுத்தது

d) கொள்ளையடித்த பணம் அல்லது சொத்தின் மதிப்பை பொறுத்தது

03. இந்திய தண்டனைச் சட்டத்தின் படி- "பெண்" என்பதற்கான வரையரை.

a) 21 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுள்ள அனைத்து பெண்கள்

b) 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுள்ள அனைத்து பெண்கள்

c) வயது வித்தாயாசமின்றி அனைத்து பெண்களும்

d) திருமணமான அனைத்து பெண்களும்

04. இந்திய தண்டனைச் சட்டம் செயல்பாட்டின் விஸ்திரனம் ____

a) ஜம்மு & காஷ்மீர் உட்பட இந்தியா முழுவதும்

b) யூனியன் பிரதேசங்கள் தவிர இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும்

c) ஜம்மு & காஷ்மீர் தவிர இந்தியா முழுவதும்

d) அந்தமான் நிக்கோபார் தீவுகளைத் தவிர இந்தியா முழுவதும்

05. திருமணமான பெண்ணை கொடுமை செய்த குற்றத்திற்கான தண்டனைப்பற்றி கூறும் சட்டப்பிரிவு____

a) 498 இ.த.ச b) 497 இ.த.ச

c) 500 இ.த.ச d) 498 (A) இ.த.ச

06. உடந்தைக் குற்றவாளி என்பவர் ____

a) குற்றம் செய்தவர்

b) குற்றம் செய்ய முயற்சி செய்பவர்

c) குற்றம் செய்ய தூண்டுபவர்

d) யாருக்கு எதிராக குற்றம் செய்யப்படுகிறதோ அவர்

07. பொருத்துக :

| | குற்றம் | | தண்டனை பிரிவு |
|---|---|---|---|
| a) | வரதட்சணை மரணம் | i | 457, 380 இ.த.ச |
| b) | கொள்ளை | ii | 392 இ.த.ச |
| c) | இரவில் கன்னமிடுதல் | iii | 376 இ.த.ச |
| d) | கற்பழிப்பு | iv | 304 (B) இ.த.ச |

a) i ii iii iv

b) ii i iv iii

c) iii iv ii i

d) iv ii i iii

08. பின்வருவனவற்றில் சரியானது எது?

a) திருட்டு குற்றத்திற்கான தண்டணைப் பிரிவு 329 இ.த.ச

b) நீதிமன்றம் பற்றி பிரிவு 23 இ.த.ச வரையறுத்துள்ளது

c) பிரிவு 326 இ.த.ச குற்றத்திற்கு அதிகப்படியான தண்டணை ஒரு வருடம் சிறை வாசம்

d) கொலை குற்றம் என்பது ஒரு மனிதனை மற்றொரு மனிதன் கொல்வது ஆகும்

09. பின்வருவனவற்றுள் சரியானது எது?

i) குற்றவியல் அதிகார வரம்பை செயல்படுத்துவது குற்றம் நடந்த இடத்தைப் பொறுத்தது

ii) அனைத்து குற்றங்களுக்கும் பொதுவான விதிவிலக்கு உள்ளது

iii) "Bonafide" என்ற வார்த்தைக்கு சட்டத்தின் கீழ் "நல்லெண்ணம்" என்று பொருள்.

iv) பிரிவு 377 இ.த.ச – பிறர் மனைவி புணர்தல் பற்றி கூறுகிறது

a) i, ii, iv	b) i & ii

c) ii, iii, iv	d) i, ii, iii

10. 7 வயதிற்குட்பட்ட ஒரு குழந்தையால் செய்யப்படும் குற்றம் ____

a) குற்றம் ஆகும்	b) 1 மாத தண்டனைக்குரியது

c) குற்றம் ஆகாது	d) சிறார் நீதிசட்டம்படி குற்றம்

11. பிடிக்கக்கூடிய குற்றம் என்பது

a) ஒரு காவல் அலுவலர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வருவாய் கோட்ட அலுவலரிடம் அனுமதி பெற வேண்டும்

b) ஒரு காவல் அலுவலர் அமர்வு நீதிபதியிடம் பிடியாணையை பெறாமல் ஒரு நபரை கைது செய்ய அதிகாரம் இல்லை

c) ஒரு காவல் அலுவலர் உரிய புலன் விசாரணைக்கு பிறகு குற்றம் செய்த நபரை பிடியாணையின்றி கைது செய்யலாம்

d) ஒரு காவல் அலுவலர் நீதிமன்றத்தில் பிணையில் விடகூடாத பிடியாணை பெற்று கைது செய்ய வேண்டும்

12. தற்காப்புக்காக செய்யப்படும் எந்த ஒரு செயலும் ____ கீழ் குற்றமாகாது

a) சட்டப்பிரிவு 98 இ.த.ச	b) சட்டப்பிரிவு 96 இ.த.ச

c) சட்டப்பிரிவு 97 இ.த.ச	d) சட்டப்பிரிவு 99 இ.த.ச

13. தேச துரோகம் பற்றி இ.த.ச ____ என்ற பிரிவு விளக்குகிறது

a) பிரிவு 124 இ.த.ச	b) பிரிவு 124 (A) இ.த.ச

c) பிரிவு 120(B) இ.த.ச	d) பிரிவு 142 இ.த.ச

14. கலகம் விளைவித்தற்கான தண்டணைப் பற்றி ____ விளக்குகிறது

a) பிரிவு 165 இ.த.ச  b) பிரிவு 148 இ.த.ச

c) பிரிவு 147 இ.த.ச  d) பிரிவு 157 இ.த.ச

15. அழைப்பாணை சார்வு செய்யப்படுவதை தவிர்க்கவோ அல்லது நீதிமன்ற பிற நடவடிக்கைகளை தவிர்ப்பதற்காக தலைமறைவானதற்கான குற்றம் ____

a) பிரிவு 171 இ.த.ச  b) பிரிவு 173 இ.த.ச

c) பிரிவு 172 இ.த.ச  d) பிரிவு 174 இ.த.ச

16. இந்திய தண்டனைச் சட்டத்தின்படி பின்வரும் குற்றங்களுக்கான தண்டனையாக மரண தண்டனையை விதிக்கலாம்.

i கொலை (பிரிவு 302 இ.த.ச)

ii இந்திய அரசுக்கு எதிராக போர் தொடுத்தல் (பிரிவு 121 இ.த.ச)

iii கற்பழிப்பு (பிரிவு 376 இ.த.ச)

iv கூட்டுக்கொள்ளை (பிரிவு 395 இ.த.ச)

a) i & ii மட்டும்  b) i, ii & iii மட்டும்

c) i & iii மட்டும்  d) மேற்கண்ட அனைத்தும்

17. I இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 511ன்படி, குற்றங்கள் செய்வதற்கான முயற்சிகளுக்கு உண்டான தண்டனையானது (இந்த சட்டத்தில் வேறு எங்கும் குறிப்பிட்டு சொல்லாத) அதிகபட்ச சிறை தண்டனையின் ஒரு பாதியாக நீட்டித்து வழங்கலாம்.

II கொலை செய்ய தயாராவது தண்டனைக்குரிய குற்றம் அல்ல அதே சமயம் கொள்ளையடிக்க தயாராவது இந்திய தண்டனைச்சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமாகும்.

பின்வருவனவற்றுல் எது சரியானது

| | |
|---|---|
| a) I மட்டும் சரி | b) II மட்டும் சரி |
| c) I & II ஆகிய இரண்டும் சரி | d) மேற்கண்ட ஏதுமில்லை |

18. திராவகம் வீசுவதற்கான தண்டனை இ.த.ச எந்த பிரிவு கூறுகிறது?

| | |
|---|---|
| a) 325 இ.த.ச | b) 326 இ.த.ச |
| c) 307 இ.த.ச | d) 326 (A)இ.த.ச |

## குற்ற விசாரணை முறைச்சட்டம்

19. கு.வி.மு சட்டத்தின் எந்த பிரிவு, காவல் துறையின் உயர்ந்த பதவியில் உள்ள அதிகாரிகளுக்கு, ஒரு காவல் நிலைய பொறுப்பு அதிகாரியின் அதிகாரங்களை செய்ய அனுமதியளிக்கிறது?

| | |
|---|---|
| a) 46 கு.வி.மு.ச | b) 36 கு.வி.மு.ச |
| c) 76 கு.வி.மு.ச | d) 56 கு.வி.மு.ச |

20. பிரிவு 57 கு.வி.மு.ச இதை பற்றி விவரிக்கிறது____

a) ஒரு நபரை கைது செய்யப்பட்ட 24 மணி நேரத்திற்கு மேலாக காவலில் வைத்திருக்க கூடாது.

b) கைது செய்யப்பட்ட நபரை, உடனடியாக வரம்புள்ள நீதிமன்ற நடுவரிடம் ஆஜர்படுத்த வேண்டும்.

c) கைது செய்யப்பட்ட நபரை, கைது செய்த இடத்திற்கு அருகில் உள்ள நீதிமன்ற நடுவரிடம் உடனடியாக ஆஜர்படுத்த வேண்டும்.

d) மேற்கூறிய ஏதுவும் இல்லை.

21. ஒரு நீதிமன்றம், தலைமறைவாக உள்ள குற்றவாளியை இந்த சட்டப் பிரிவின் கீழ் அறிவிக்கப்பட்ட குற்றவாளியாக உத்தரவு பிறப்பிக்க முடியும் ____

a) 84 கு.வி.மு.ச　　b) 82 கு.வி.மு.ச

c) 80 கு.வி.மு.ச　　d) 81 – A கு.வி.மு.ச

22. ஒரு காவல் நிலைய அதிகாரி எந்த சட்டப் பிரிவின் கீழ் ஒரு பிடிக்க கூடிய குற்றம் நடந்ததாக உள்ள புகார் / முதல் தகவலின் பேரில், முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்ய முடியும்?

a) 155 கு.வி.மு.ச　　b) 164 கு.வி.மு.ச

c) 154 கு.வி.மு.ச　　d) 144 கு.வி.மு.ச

23. தண்டனை பெற்ற குற்றவாளியிடமிருந்து அமைதி காக்கும் பிணை பத்திரம் கு.வி.மு.ச வின் எந்த சட்டப் பிரிவின் படி வாங்க வேண்டும்?

a) 107 கு.வி.மு.ச　　b) 110 கு.வி.மு.ச

c) 109 கு.வி.மு.ச　　d) 106 கு.வி.மு.ச

24. கு.வி.மு. சட்டத்தின் படி காவல் நிலையம் இவ்வாறு வரையறுக்கப்பட்டுள்ளது ____

a) காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்கள் பணிபுரியும் எந்த கட்டிடமும் அல்லது இடமும்.

b) மாநிலத்தின் உயர் நீதிமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எந்த இடமும் அல்லது கட்டிடமும்.

c) மாநில அரசாங்கத்தால் பொதுவாக அல்லது சிறப்பாக அறிவிக்கப்பட்ட பணிபுரியுமிடம் அல்லது இடம்.

d) காவல் துறையால் கட்டப்பட்ட எந்த ஒரு கட்டிடமும்.

25. கு.வி.மு. சட்டப்பிரிவு 160 படி ____

a) ஒரு பெண்ணை காவல் நிலையத்திற்கு அழைப்பாணை மூலம் அழைக்கலாம்.

b) 15 வயதிற்குட்பட்ட ஆண் ஒருவரை காவல் நிலையத்திற்கு அழைப்பாணை மூலம் அழைக்கலாம்.

c) திருமணமாகாத பெண்ணை காவல் நிலையத்திற்கு அழைப்பாணை மூலம் அழைக்கலாம்.

d) ஒரு பெண்ணை அழைப்பாணை மூலம் காவல் நிலையத்திற்கு அழைக்கக் கூடாது.

26. கு.வி.மு. சட்டத்தின் ____ பிரிவின் கீழ், புலன் விசாரணைக்காக ஒரு ஆவணம் அல்லது பிற பொருட்களை சமர்பிக்கும்படி காவல் அதிகாரி எவர் ஒருவருக்கும் அழைப்பாணை அல்லது அறிவிப்பு அனுப்பலாம்?

a) 92 கு.வி.மு.ச b) 97 கு.வி.மு.ச

c) 91 கு.வி.மு.ச d) 94 கு.வி.மு.ச

27. ____ கு.வி.மு.சட்டத்தின் படி அடைக்கப்பட்ட இடங்களில் அதன் பொறுப்பாளர் ஒரு காவல் அதிகாரி, சோதனைக்குரிய பிடியாணையை காண்பிக்கும்போது சோதனை செய்வதற்கு அனுமதிக்க கடமைப்பட்டுள்ளார்.

a) 98 கு.வி.மு.ச
b) 99 கு.வி.மு.ச
c) 101 கு.வி.மு.ச
d) 100 கு.வி.மு.ச

28. பின் வருவனவற்றில் எது சரியானது?

a) பிரிவு 160 கு.வி.மு.ச வின் படி, பிடிக்க கூடிய குற்ற வழக்குகளில் ஒரு காவல் அதிகாரி எந்த இடத்திலும் சோதனை செய்யலாம் என்ற அதிகாரத்தை பற்றி விவரிக்கிறது.
b) பிரிவு 156 கு.வி.மு.ச வின் படி, பிடிக்க கூடிய குற்ற வழக்குகளை காவல் அதிகாரிகள் புலன் விசாரணை செய்யும் அதிகாரத்தை பற்றி விவரிக்கிறது.
c) பிரிவு 158 கு.வி.மு.ச வின் படி, காவல் அதிகாரிகள் ஒரு வெளிநாட்டவரைக் கைது செய்யும் அதிகாரத்தை பற்றி விவரிக்கிறது.
d) பிரிவு 145 கு.வி.மு.ச வின் படி, பிரேத விசாரணையின் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் பற்றி விவரிக்கிறது.

29. கு.வி.மு. சட்டத்தின் எந்த பிரிவின் கீழ் ஒரு எதிரிக்கு விடுதலை அல்லது தண்டனையை ஒரு நீதிபதி உத்தரவிடலாம்.

a) 247 கு.வி.மு.ச
b) 268 கு.வி.மு.ச
c) 248 கு.வி.மு.ச
d) 267 கு.வி.மு.ச

30. அரசு வழக்குறைஞர் கு.வி.மு. சட்டத்தின் எந்த பிரிவின் கீழ் நீதிமன்ற அனுமதியுடன் ஒரு வழக்கை நீதிமன்ற விசாரணையில் இருந்து திரும்ப பெறலாம்

a) 321 கு.வி.மு.ச
b) 323 கு.வி.மு.ச
c) 326 கு.வி.மு.ச
d) 324 கு.வி.மு.ச

31. ____ பிரிவின் படி ஒரு வழக்கை சமரசம் செய்யலாம்.

a) 319 கு.வி.மு.ச
b) 320 கு.வி.மு.ச
c) 322 கு.வி.மு.ச
d) 314 கு.வி.மு.ச

32. அரசு தரப்பு ஒரு வழக்கில் நீதிமன்ற விசாரணையின்போது புது ஆதாரம் கிடைத்தால் ____ பிரிவின் படி மீண்டும் புலன்விசாரணை செய்யலாம்.

a) 173(1) கு.வி.மு.ச b) 173(4) கு.வி.மு.ச

c) 173(8) கு.வி.மு.ச d) 173(12) கு.வி.மு.ச

33. கு.வி.மு. சட்டத்தின் ____ பிரிவின்படி, ஒரு காவல் அதிகாரிக்கு 9 சூழ்நிலைகளில், எந்த ஒரு நபரையும் பிடியாணை இல்லாமல் கைது செய்யும் அதிகாரம் உள்ளது.

a) 52 கு.வி.மு.ச b) 44 கு.வி.மு.ச

c) 45 கு.வி.மு.ச d) 41 கு.வி.மு.ச

34. பாதிக்கப்பட்ட ஒரு நபருக்கு இழப்பீடு வழங்கும் திட்டம் கு.வி.மு. சட்டத்தின் ____ பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளது.

a) 353 கு.வி.மு.ச b) 100 கு.வி.மு.ச

c) 357 - A கு.வி.மு.ச d) 468 கு.வி.மு.ச

35. கு.வி.மு. சட்டத்தின் 176 பிரிவின் படி ____ போலிஸ் காவலில் ஒரு நபர் இறந்தால் அது பற்றி விசாரணை நடத்தும் அதிகாரம் உள்ளது.

கீழ்கண்டவற்றில் எது சரி?

a) காவல் ஆய்வாளர் b) நீதித்துறை நடுவர்

c) காவல் கண்காணிப்பாளர் d) தாசில்தார்

36. ஒரு நீதித்துறை நடுவருக்கு ஒரு குற்றம் சாட்டப்பட்ட நபரை கு.வி.மு சட்டத்தின் 167 பிரிவின் கீழ் ____ நாட்களுக்கு நீதிமன்ற காவலில் வைக்க அதிகாரம் உள்ளது.

a) 21 நாட்கள் b) 28 நாட்கள்

c) 15 நாட்கள் d) 18 நாட்கள்

37. கு.வி.மு. சட்டத்தின் 160 பிரிவின் கீழ் ஒரு காவல் அதிகாரி எந்த நபரை சாட்சியாக விசாரிக்க அழைப்பாணை அனுப்ப முடியாது. அந்த நபர் ____

i) புத்திசுவாதினமில்லாத அல்லது மாற்று திறனாளி

ii) 15 வயதிற்குட்பட்ட ஆண் மற்றும் 65 வயதிற்கு மேற்பட்ட ஆண்.

iii) 15 வயதிற்கும் 65 வயதிற்கும் இடைப்பட்ட வயதுடைய ஆண்.

iv) எந்த ஒரு பெண்ணையும்.

a) i, ii & iii  b) ii, iii & iv

c) i, ii & iv  d) i, iii & iv

38. ஒரு காவல் அதிகாரி, ஒரு பிடிக்க கூடிய குற்றம் நடைபெறுவதை குறுக்கிட்டு தடுக்க ____ கு.வி.மு. சட்டத்தின் படி அதிகாரம் உள்ளது.

a) 153 கு.வி.மு.ச  b) 150 கு.வி.மு.ச

c) 152 கு.வி.மு.ச  d) 149 கு.வி.மு.ச

39. கு.வி.மு. சட்டத்தின் ____ பிரிவு நீதிமன்றம் எந்த ஒரு வழக்கையும் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள குறிப்பிட்ட காலவரம்பை கடந்த பின்பு விசாரணைக்கு எடுத்துகொள்ளுவதை தடை செய்கிறது.

a) 428 கு.வி.மு.ச  b) 378 கு.வி.மு.ச

c) 468 கு.வி.மு.ச  d) 486 கு.வி.மு.ச

40. கு.வி.மு. சட்டத்தின் 164 பிரிவின் கீழ், ஒரு நீதிதுறை நடுவர் ____ஐ பதிவு செய்யலாம்.

i. எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தை மட்டும்

ii. சாட்சியின் வாக்குமூலத்தை மட்டும்

iii. ஒரு நபரின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் வாக்குமூலம்

iv. நீதிதுறை நடுவர் எதையும் பதிவு செய்யவதற்கு அதிகாரம் இல்லை

a) i & ii  b) iv மட்டும்

c) iii மட்டும்  d) ii & iv

## இந்திய சாட்சியச்சட்டம்

41. எத்தனை வகையான சாட்சியங்கள் ஆவண சாட்சியங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

a) நேரடி சாட்சியம் மற்றும் மறைமுக சாட்சியம்.

b) அசல் சாட்சியம் மற்றும் இரண்டாம் நிலை சாட்சியம்.

c) முதன்மை சாட்சியம் மற்றும் இரண்டாம் நிலை சாட்சியம்.

d) மேற்கூறிய ஏதுவும் இல்லை.

42. ஒரு நபரின் மரண வாக்குமூலம், இ.சா.சட்டத்தின் எந்த பிரிவின் படி ஏற்றுக் கொள்ளத்தக்க மற்றும் தொடர்புடைய சாட்சியமாகும்?

a) 132 இ.சா.ச b) 42 இ.சா.ச

c) 32 இ.சா.ச d) 37 இ.சா.ச

43. முதன்மை சாட்சியம் என்பது ____

a) நீதிமன்ற ஆய்விற்காக சமர்பிக்கப்பட்ட அசல் ஆவணம்.

b) காவல் துறையின் கோப்பில் உள்ள ஆவணம்.

c) ஒரு குறிப்பிட்ட நபரிடம் இருப்பதாக சொல்லப்படும் ஆவணம்.

d) மேற்கூறிய ஏதுவும் இல்லை.

44. இந்திய சாட்சிய சட்டம் இதற்கு பொருந்தும்____

a) குடியியல் (சிவில்) சட்டங்களுக்கு மட்டும்.

b) குற்ற வழக்கு சட்டங்களுக்கு மட்டும்.

c) குடியியல் (சிவில்) மற்றும் குற்ற வழக்கு (கிரிமினல்) ஆகிய இரண்டு சட்டங்களுக்கும்.

d) முக்கிய (மேஜர்) சட்டங்களுக்கு மட்டும்.

45. கல் அல்லது உலோக தகட்டின்மீது பொறிக்கப்பட்டவை என்பது ____

a) வாய்மொழி சாட்சியம் b) முதன்மை சாட்சியம்

c) ஆவண சாட்சியம் d) இரண்டாம் நிலை சாட்சியம்

46. ஒரு எதிரி தன்னிச்சையான ஒப்புதல் வாக்குமூலத்தில் தான் ஒரு கத்தியை பயன்படுத்தி ஒரு கொலை செய்து விட்டதாக புலன் விசாரணை அதிகாரியிடம் வாக்குமூலம் கொடுக்கிறான். புலன் விசாரணை அதிகாரி, எதிரி அடையாளம் காட்டிய அந்த கத்தியை கைப்பற்றினார். இது அனுமதிக்கத்தக்கதா?

a) ஆம். எதிரி தன்னுடைய குற்றத்தை ஒப்பு கொண்டான்.

b) இல்லை. எதிரி காவல்துறையினரின் காவலில் இருக்கும் போது ஒப்புதல் வாக்கு மூலம் கொடுத்துள்ளான்.

c) இல்லை. வழக்கு விசாரணையின் போது தான் இது பற்றி தீர்மானிக்கப்படும்.

d) ஆம். எதிரியால் ஒப்புக்கொள்ளப்பட்ட குறிப்பிட்ட ஒப்புதல் வாக்குமூல பகுதியின் பேரில் ஒரு புதிய உண்மை கண்டுபிடிக்கப்பட்டதால், இது ஏற்புடைய சாட்சியம் ஆகும்.

47. விரல்ரேகை நிபுணர், அறிவியல் அதிகாரி மற்றும் ஆவண நிபுணர் ஆகியோர்கள் நிபுணர்கள் என்று கூறுவது ________ பிரிவு.

a) 65 இ.சா.ச
b) 47 இ.சா.ச
c) 42 இ.சா.ச
d) 45 இ.சா.ச

48. இந்திய சாட்சிய சட்டத்தின் எந்த பிரிவு, ஒரு எதிரியின் கூட்டாளியை அந்த எதிரிக்கு எதிரான திறமையான சாட்சி என்று கூறுகிறது.

a) 143 இ.சா.ச
b) 133 இ.சா.ச
c) 153 இ.சா.ச
d) 123 இ.சா.ச

49. இந்திய சாட்சிய சட்டத்தின் 108 வது பிரிவின் படி, ஒரு நபர் உயிருடன் இருப்பது பற்றி மெய்பிக்கும் பொறுப்பு, அந்த நபர் பற்றி எந்த ஒரு தகவலும் ____வருடங்களுக்கு கிடைக்கவில்லை என்றால் தான்.

a) 7 years
b) 17 years
c) 10 years
d) 20 years

50. இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 54 ன் படி கீழ்கண்டவற்றில் எது சரி?

a) முந்தைய தண்டனை ஒருவருடைய கெட்ட நடத்தைக்கான தொடர்புடைய சாட்சியம் இல்லை.

b) முந்தைய தண்டனை ஒருவருடைய கெட்ட நடத்தையை நிருபனம் செய்யும் சாட்சியம் ஆகும்.

c) ஒரு எதிரியின் நல்ல குணங்கள் தொடர்புடையதாகும்.

d) மேற்கூறிய ஏதுவும் இல்லை.

## தமிழ் நாடு காவல் நிலை ஆணை

51. தமிழ்நாடு காவல் நிலை ஆணைகள் எத்தனை தொகுதிகள் உள்ளன?

a) 4 b) 1

c) 3 d) 2

52. காவல் நிலைய ஆணை ____ கைப்பற்றுதல் மகசர் பற்றி கூறுகிறது.

a) PSO 566 b) PSO 576

c) PSO 569 d) PSO 579

53. காவல் நிலை ஆணை ____ வழக்கு நாட்குறிப்பு பற்றி வரையறுத்துள்ளது

a) PSO 597 b) PSO 587

c) PSO 577 d) PSO 567

54. பின்வருவனவற்றில் எது சரியானது?

a) "சி" பட்டியல் என்பது காவல் அலுவலர்களின் தகுதிகாண் பட்டியல் ஆகும்.

b) "பி" பட்டியலில், பதவி உயர்வுக்கு தகுதியான காவல் அலுவலர்களின் பெயர்கள் சேர்க்கப்பட்டுள்ளன

c) ஒரு காவல் அலுவலர் தனது தகுதிகாண் காலத்தை முடித்த பிறகு "A" பட்டியலுக்கு கொண்டு வரப்படுகிறார்

d) மேலே சொன்ன எதுவும் இல்லை.

55. காவல் நிலை ஆணை 180 இன் படி பின்வருவனவற்றில் எது சரியானது?

a) ஒரு காவல் நிலையத்தை ஆண்டுக்கு ஒருமுறை சார்பு ஆய்வாளர் ஆய்வு செய்ய வேண்டும்.

b) ஒரு காவல் நிலையத்தை 6 மாதங்களுக்கு ஒருமுறை வட்ட ஆய்வாளர் ஆய்வு செய்ய வேண்டும்.

c) ஒரு காவல் நிலையத்தை இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வட்ட ஆய்வாளர் ஆய்வு செய்ய வேண்டும்.

d) மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை காவல் நிலையத்தை வட்ட ஆய்வாளர் ஆய்வு செய்ய வேண்டும்.

56. காவல் நிலை ஆணை ____ இரயிலில் ரோந்து செல்லும் ரோந்து காவலர்களின் பணிபற்றி கூறுகிறது

a) PSO 747 b) PSO 639

c) PSO 439 d) PSO 539

57. காவல் நிலை ஆணை ____ மாவட்ட ஆயுதப்படை பற்றி வரையறுத்துள்ளது

a) PSO 774 b) PSO 604

c) PSO 504 d) PSO 404

58. காவல் நிலை ஆணை ____ ரோந்துக்கு காவலர்களை அனுப்புவதன் நோக்கம் பற்றி கூறுகிறது.

a) PSO 366 b) PSO 363

c) PSO 466 d) PSO 536

59. குற்றம் சாட்டப்பட்டவரை அடையாளம் காண நடத்தப்படும் அடையாள அணிவகுப்பு பற்றிய நடை முறைகள் ____ல் வரையறுக்கப்பட்டுள்ளன

a) PSO 500 b) PSO 600

c) PSO 700 d) PSO 400

60. காவல் நிலை ஆணை 711-ன் படி ஒரு காவல் நிலையத்தில் உள்ள காவல் பணியாளர்களுடைய நோட்டுப் புத்தகங்களின் பாதுகாப்பிற்கு யார் பொறுப்பு____

a) வட்ட எழுத்தர்
b) கா. து. க. அலுவலக எழுத்தர்
c) மா. கு. ஆ. க. எழுத்தர்
d) நிலைய எழுத்தர்

61. PSO 715-ன் படி பராமரிக்கப்படும் நீதிமன்ற நிறைவேற்ற கட்டளை பதிவேட்டில் என்ன விவரங்கள் பதிவு செய்யப்படுகிறது

a) நீதிமன்றங்களில் இருந்து பெறப்பட்ட அழைப்பாணைகள் மற்றும் பிடியாணைகளின் விவரங்கள்
b) நீதிமன்றங்களில் இருந்து பெறப்பட்ட நோட்டீஸ் விவரங்கள்
c) நீதிமன்றங்கள் வழங்கிய தீர்ப்புகளின் விவரங்கள்
d) மேலே கூறிய எதுவும் இல்லை

62. கைதி பரிசோதனை பதிவேட்டில் கைதியின் விவரங்களை பதிவு செய்வது பற்றி கூறும் காவல் நிலை ஆணை ____

a) PSO 613
b) PSO 513
c) PSO 713
d) PSO 413

63. PSO 719-ன் படி என்ன பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும்?

a) கிராம பட்டியல்
b) பாரா மாற்று புத்தகம்
c) கெட்ட நடத்தைக்காரர்களின் பதிவேடு
d) வேலைப் பதிவேடு

64. PSO 745ல் முன்னாள் குற்றவாளிகளின் பெயர்கள் பகுதி.III GCR பதிவேட்டில் இருந்து ____ ஆண்டுகளுக்குப் பிறகு, கடைசியாகத் தண்டனை விதிக்கப்பட்ட நாளிலிருந்து எந்த பாதகமான செயலிலும் ஈடுபடவில்லை என்றால், அவர்களின் பெயர்களை நீக்கலாம்.

a) 10 ஆண்டுகள்
b) 20 ஆண்டுகள்
c) 25 ஆண்டுகள்
d) 15 ஆண்டுகள்

## காவல் நிர்வாகம்

65. முதலமைச்சரின் காவலர் பதக்கம் ________ காலத்திற்கு குறையாமல் கலங்கமற்ற சேவையாற்றிய காவல்துறை காவலர்களுக்கு வழங்கப்படுகிறது.

a) 15 ஆண்டுகள்
b) 20 ஆண்டுகள்
c) 25 ஆண்டுகள்
d) 10 ஆண்டுகள்

66. தமிழக காவல்துறையின் எந்த சிறப்புப் பிரிவு மாண்புமிகு தமிழக முதல்வரின் வருகையின் போது பாதுகாப்பு அளிக்கிறது?

a) தமிழ்நாடு சிறப்பு காவல் படை
b) உள்வட்ட பாதுகாப்பு சி.ஐ.டி
c) அதிதீவிர படை
d) சிறப்பு பிரிவு சி.ஐ.டி

67. பின்வருவனவற்றில் எது சரியானது?

மண்டலம் - மாவட்டம்

a) தெற்கு மண்டலம்- திருவாரூர்
b) மத்திய மண்டலம்- ராணிபேட்டை
c) மேற்கு மண்டலம் - தர்மபுரி
d) வடக்கு மண்டலம்-கிருஷ்ணகிரி

68. குதிரைகளை உறுப்பினர்களாகக் கொண்ட பிரிவின் பெயர் என்ன?

a) குதிரைப்படை
b) குதிரை பிரிவு
c) குதிரை அணி
d) குதிரைகள் பராமரிப்பு அலகு

69. காவலர் வீரவணக்க நாள் ஒவ்வொரு வருடமும் ________ அன்று கடைபிடிக்கப்படுகிறது.

a) ஜனவரி 31 ஆம் நாள்
b) நவம்பர் 21 ஆம் நாள்
c) அக்டோபர் 21 ஆம் நாள்
d) ஆகஸ்ட் 21 ஆம் நாள்

70. மெச்சத்தக்க சேவைக்கான பதிவுக்கு (MSE) தகுதியானவர் யார்?

a) காவல் ஆய்வாளர்
b) சார்பு ஆய்வாளர்
c) காவல்துணை கண்காணிப்பாளர்
d) காவல் கண்காணிப்பாளர் மற்றும் அதற்கு மேல் பதவியில்

71. பின்வரும் தண்டனைகளில் எது பென்சிலைப் பயன்படுத்தி பணிப்புத்தகத்தில் பதியப்படுகிறது?

a) அனைத்து சிறிய தண்டனைகள்
b) தள்ளிவைக்கப்பட்ட தண்டனைகள்
c) அ மற்றும் ஆ
d) ஒழுங்குமுறை தண்டனைகள்

72. காவல் துறையில் பண வெகுமதியைப் பெற தகுதியுடையவர்கள் யார்?

a) காவல் ஆய்வாளர்
b) காவலர்கள் மட்டும்
c) காவலர்கள் முதல் சார்பு ஆய்வாளார்கள் வரை உள்ளவர்கள்
d) சார்பு ஆய்வாளர் மட்டும்

73. காவல் நிலையத்தில் பிடிக்க கூடாத குற்றத்திற்காக புகார் அளிக்கப்படும்போது ____பதிவேட்டில் பதிவு செய்யப்படுகிறது.

a) பகுதி I & பகுதி III
b) பகுதி II & பகுதி III
c) நீதிமன்ற நிறைவேற்று கட்டளை பதிவேடு
d) பொது நாட்குறிப்பு மற்றும் சமுதாயப்பணி பதிவேடு

74. இலங்கை அகதிகள் முகாம்கள் மற்றும் வெடிமருந்துக் கடைகளின் செயல்பாடுகளைக் கண்காணிக்கும் தமிழ்நாடு காவல்துறையின் சிறப்புப் பிரிவு?

a) சிறப்பு பிரிவு சி.ஐ.டி
b) குற்றப்பிரிவு சி.ஐ.டி
c) தனிப் பிரிவு சி.ஐ.டி
d) "Q" பிரிவு சி.ஐ.டி

75. மாவட்டங்களில் குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் உத்தரவு பிறப்பிக்க அதிகாரம் உடையவர் யார்?

a) காவல் கண்காணிப்பாளர்
b) மாவட்ட வருவாய் அதிகாரி
c) மாவட்ட ஆட்சியர்
d) நீதிமன்ற நடுவர்

76. ஒரு தலைமைக் காவலர் SSI ஆக தரம் உயர்த்தப்படுவதற்கான தகுதிகள் ____

a) 25 ஆண்டுகள் பணி முடித்திருக்க வேண்டும்.

b) 25 ஆண்டுகள் பணி முடித்திருக்க வேண்டும், அதில் 5 ஆண்டுகள் தலைமைக் காவலர் பதவியில் பணிபுரிந்து இருக்க வேண்டும்.

c) 25 ஆண்டுகள் பணி முடித்திருக்க வேண்டும், அதில் 10 ஆண்டுகள் தலைமைக் காவலர் பதவியில் பணிபுரிந்து இருக்க வேண்டும்.

d) 10 ஆண்டுகள் பணி முடித்திருக்க வேண்டும்

77. தமிழ்நாட்டில் புதிதாக உருவாக்கப்பட்ட காவல் ஆணையரகங்கள் எவை?

a) தாம்பரம் மற்றும் ஈரோடு
b) தாம்பரம் மற்றும் ஆவடி
c) தாம்பரம் மற்றும் மாதவரம்
d) சேலம் மற்றும் திருப்பூர்

78. காவல்துறை இயக்குநரின் வாகனத்தின் முன் மற்றும் பின்புறத்தில் எத்தனை நட்சத்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன?

a) இரண்டு நட்சத்திரங்கள்.
b) ஒரு நட்சத்திரம்.
c) மூன்று நட்சத்திரங்கள்.
d) நான்கு நட்சத்திரங்கள்.

79. i. காவல்துறை அதிகாரிகளுக்கு வழங்கப்படும் CCTNS கைபேசி செயலியில் முக அடையாளம் காணும் வசதி உள்ளது

ii. காவல் நிலையத்தில் இணைய இணைப்பு வேலை செய்யவில்லை என்றால் CCTNSல் FIR பதிவு செய்ய முடியாது.

மேலே உள்ள கூற்றுகளில் எது சரியானது?

a) i மட்டும்
b) ii மட்டும்
c) i & ii இரண்டும்
d) மேற்கண்ட எதுவும் இல்லை

80. பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் பெரிய விமான நிலையங்களைப் பாதுகாப்பதற்கு எந்த மத்திய ஆயுதக் காவல் படை பொறுப்பு வகிக்கிறது?

a) BSF
b) CRPF
c) ITBP
d) CISF

## விடைகள்

## சட்டம் மற்றும் காவல்துறை தொடர்பான பாடங்கள்

## மாதிரி வினாத்தாள்

| வி.எண். | விடை | வி.எண். | விடை | வி.எண். | விடை | வி.எண். | விடை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | c | 21 | b | 41 | c | 61 | a |
| 2 | b | 22 | c | 42 | c | 62 | c |
| 3 | c | 23 | d | 43 | a | 63 | b |
| 4 | a | 24 | c | 44 | c | 64 | a |
| 5 | d | 25 | d | 45 | c | 65 | d |
| 6 | c | 26 | c | 46 | d | 66 | b |
| 7 | d | 27 | d | 47 | d | 67 | c |
| 8 | d | 28 | b | 48 | b | 68 | a |
| 9 | d | 29 | c | 49 | a | 69 | c |
| 10 | c | 30 | a | 50 | b | 70 | a |
| 11 | c | 31 | b | 51 | c | 71 | b |
| 12 | b | 32 | c | 52 | c | 72 | c |
| 13 | b | 33 | d | 53 | d | 73 | d |
| 14 | c | 34 | c | 54 | c | 74 | d |
| 15 | c | 35 | b | 55 | b | 75 | c |
| 16 | a | 36 | c | 56 | c | 76 | c |
| 17 | c | 37 | c | 57 | d | 77 | b |
| 18 | d | 38 | d | 58 | a | 78 | c |
| 19 | b | 39 | c | 59 | b | 79 | c |
| 20 | a | 40 | c | 60 | d | 80 | d |